1993 மார்ச் 31]

அந்தக் கொள்கை அடிப்படையிலே நிச்சயமாக தாலுக்கா மருத்துவமனையாக இருக்கின்ற வாடிப்பட்டி மருத்துவ மனைக்கு அந்த வசதிகள் எல்லா இடத்திலேயும் கிடைக்கிற நேரத்திலே, அங்கேயும் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 183, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

183—

கல்வராயன் மலைப் பகுதியில் பரவி வரும் காலரா நோயைத் தடுக்கும் நடவடிச்கை.

*10139—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப் பகுதியில் அடிக்கடி காலரா நோய் பரவி வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) 1991-ல் காலராவில் இறந்தவர்களின் குடும்பத் திற்கு அரசு உதவி செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காலரா/வாந்திபேதி போன்ற நோய்களின் அறிகுறி இப்பகுதியில் தென்பட்டால் களப்பணியாளர்கள் இப் பகுதிக்கு விரைந்து அனுப்பப்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப் படுத்தப்படுவதுடன், அவர்கள் வீடுகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, மேலும் அந்நோய் ஏனைய இடங்களில் பரவாவண்ணம் அனைத்துத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஆ) இம்மாதிரி நோயால் மரணம் அடைந்தவர்களுக்கு அரசு நிதி உதவி வழங்குவதில்லை.

திரு. சி. இராமசுவாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் அடிக்கடி காலரா நோய் பரவி பல பேர்கள் இறக்கிறார்கள். மலைவாழ் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். 1991 ஆம் ஆண்டில், சுமார் 20 பேர்கள் இறந்துவிட்டதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. அந்த 20 பேர்கள் குடும்பத்திற்கும் நிதி உதவிசெய்ய

முடியாது என்று கூறியுள்ளார்கள், எனவே, இந்த காலரா நோய் மீண்டும் அங்கே வராமல் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, 1991 ஆம் ஆண்டு அங்கே ஓரளவிற்கு காலரா பரவியது. உண்மை. ஆனால், அதற்குப் பின்பு அது கட்டுப்படுத்தப்பட்டு 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 3 பேர்கள் அங்கே காலரா நோயால் பாதிக்கப்பட்டார்கள். அதிலே ஒருவர் இறந்து போனார். அதற்குப் பின்னாலே, இதுவரையிலும் அங்கே காலரா இல்லாமல் தடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உதவித் தொகையைப் பொறுத்தவரையில், இதுபோன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கொடுக்கின்ற வழக்கம் இதுவரையில், அரசிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, காலரா நோயால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உடனடியாக சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். கல்வராயன் மலைப் பகுதியிலே வேலை செய்கிற டாக்டர்கள் மலைப் பகுதிக்குச் செல்வதில்லை. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் இதைப் பற்றிக் கூறினேன். ஆனால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, மலைவாழ் மக்கள் நலனை முன்னிட்டு, இந்த காலரா நோய் பரவாமல் இருக்க, மருத்துவர்கள் சென்று அங்கே சிகிச்சை அளிக்க, அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் எங்கெங்கே நியமிக்கப் படுகிறார்களோ அவர்கள் அந்தந்த இடங்களுக்குப் போக வேண்டும். சில நேரங்களிலே அவர்கள் போவதில்லை. அவர்கள் அங்கே போய் இருந்து பணியாற்ற வேண்டும் என்று சொல்வதற்கு பல்வேறு விதிமுறைகள் அவர்களுக்கு சாதகமாக இருக்கிற காரணத்தால், அவர்கள் பல்வேறு விடுமுறைகளிலே செல்கிற வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிற காரணத்தால், இதுபோன்ற சிக்கல்கள் சில நேரங்களிலே ஏற்படுகின்றன. எனவே, அந்த நிலைமைகளை எல்லாம் பார்த்த பின்புதான், இதுபோன்ற ஒதுக்குப்புறமாக, மலைப் பகுதியாக இருக்கின்ற இடங்களில் மருத்துவர்கள் இல்லாமல் போய்விடுகிறார்கள், தங்காமல் வந்துவிடுகிறார்கள் என்பதை எல்லாம் உணர்ந்த இந்த அரசாங்கம், இப்போது புதிய திட்டத்தை கடந்த மானியக் கோரிக்கையின்போது அறிவித்திருக்கிறது. இதன்படி, இப்படி ஒதுக்குப்புறமாக

1993 மார்ச் 31]

மருத்துவர்கள் வராமல் இருக்கின்ற அந்த இடங்களுக்கு தனியாக அந்த இடத்தையே குறிப்பிட்டு, மருத்துவர்கள் தேவை என்று பத்திரிகைகள் மூலமாக விளம்பரம் செய்து, அதிலே யார் மனு செய்கிறார்களோ அவர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அங்கே தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டும் என்ற உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டு, இதுபோன்ற இடங்களிலே அவர்களை அமர்த்தலாம்என்ற முடிவை எடுத்திருக்கிறது. ஒரு வேளை அவர்கள் அங்கு தங்கி அங்கே பணியாற்றவில்லை என்றாலோ அல்லது அடிக்கடி விடுமுறையில் போகிறார்கள் என்று சொன்னால், உடனடியாக அவர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு அடுத்தவர்களைப் போடுவதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தத் திட்டத்தை இப்போது நாம் அமலாக்க இருக்கிறோம். இன்னும் சில நாட்களுக்குள்ளே அதை அமலாக்குவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி அமலாக்குகிற போது எல்லா இடங்களிலேயும் இந்தப் பிரச்சினை முழுவதுமாக தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 184, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

184—

நிரந்தரக் கருத்தடைக்குப் பின்னரும் குழந்தை பெற்ற தாய்மார்களின் நிலை.

* 10410—திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிரந்தரக் கருத்தடை செய்து கொண்ட பின்பும் அது தோல்வியுற்று குழந்தை பெற்ற தாய்மார்களின் நிலையை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த தாய், சேய் நலனைக் காக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிரந்தரக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின்பு அது தோல்வியுற்று குழந்தை பெற்ற தாய் மற்றும் சேய் நலனைக் காக்க அரசு எல்லாவித நடவடிக்கையும்